



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் ஊத்துக்குளி வடக்கு, மத்திய ஒன்றியத்திலுள்ள கழக நிர்வாகிகளுக்கு ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் கழக கொள்கை பரப்புச் இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், மாவட்டக் கழக பொருளாளர் ப.க.பழனிச்சாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.குமரசாமி,கழக தேர்தல் பணிக்குழு உறுப்பினர் கே.பி.சாமி , வழக்கறிஞர் திருமலை, ஊத்துக்குளி மத்திய ஒன்றிய கழக செயலாளர் குன்னத்தூர் ராஜா, பேரூர் கழக செயலாளர் சென்னியப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டையில் முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

புதுக்கோட்டை, ஆக. 20–

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக திகழ்ந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 93 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் முரசொலி மாறன் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், மேயர் திலகவதி செந்தில், த.சந்திரசேகரன், செ.அசோக்பாண்டியன், சு.சண்முகம், துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஷ், அரு.வீரமணி, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, தவ.பாஞ்சாலன், மு.க.ராம கிருஷ்ணன், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், செல்லத்துரை, எம்.எம்.பாலு, செந்தாமரை பாலு, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, சி.அரங்கநாயகம், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா மற்றும் கழக உடன் பிறப்புகள் பங்கேற்றனர்.

## குருதி: கருப்பு சிவப்பு / உயிர்: தி.மு.கழகம்




மன்னார்குடி நகராட்சி 33வது வட்ட முன்னாள் பிரதிநிதி காமராஜ் அண்மையில் கழகத்தின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்திற்கு குடும்பத்தினருடன் வந்தார். கழகத் தலைவர் திராவிட நாயகரைப் பார்க்கும் ஆர்வத்துடன் வந்த அவருக்கு, அன்று அந்த வாய்ப்பு அமையவில்லை. உடம்பில் ஓடுவது கருப்புசிவப்பு ரத்தம் என்ற உணர்வுடனும், தி.மு.க.தான் உயிர் என்ற இலட்சியத்துடனும் அறிவாலயம் முகப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகள் முன்பாக நின்று படம் எடுத்துக் கொண்டார். அதனை கழக நண்பர்கள் அனைவருக்கும் பகிர்ந்து மகிழ்ந்தார்.

63 வயதான கழக உடன்பிறப்பு மன்னார்குடி காமராஜ் அடுத்த சில நாட்களில் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் காலமாகிவிட்டார். எந்த நிலையிலும் கழக உணர்வு குறையாத இவரைப் போன்ற கொள்கைக் குடும்பத்தினரால் தான் 75ஆண்டுகளைக் கடந்த ஆலமரமாக நிலைத்திருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

### உள்நாட்டிலிருந்தும் - வெளிநாடுகளிலிருந்தும்

## பிரதமருக்கு வழங்கப்பட்ட நினைவுப் பரிசுகள், அன்பளிப்புகள் ஏலம் விடப்பட்டனவா?

### மக்களவையில் கே.ஈஸ்வரசாமி கேள்வி!



புதுடெல்லி, ஆக. 20 -

உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பிரதமருக்கு வழங்கப்பட்ட நினைவுப் பரிசுகள், அன்பளிப்புகள் போன்றவை ஏலம் விடப்பட்டனவா? அவ்வாறெனில், இந்த ஏலங்கள் மூலம் அரசுக்குக் கிடைத்த தொகை குறித்த விவரங்கள் என்ன? கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏலங்கள் நடைபெற்ற தேதிகள் யாவை? மற்றும் 2014 ஆம் ஆண்டிற்கு முன்பு எத்தனை முறை ஏலங்கள் நடத்தப்பட்டன? என்பது குறித்த விவரங்கள் மற்றும் அவற்றின் தேதிகள் யாவை? என்று பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

பண்பாடு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அளித்த பதில் வருமாறு : ஆம், பிரதமருக்கு வழங்கப்பட்ட நினைவுப் பரிசுகள் மற்றும் அன்பளிப்பு களை ஏலம் விட்டதன் மூலம் அரசுக்குக் கிடைத்த தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு:

1வது பதிப்பு (2021) : ரூ.3.1 கோடி, 2வது பதிப்பு (2022) : ரூ.3.6 கோடி, 3வது பதிப்பு (2023) : ரூ. 15.8 கோடி, 4வது பதிப்பு (2023) : ரூ. 14.4 கோடி, 5வது பதிப்பு (2024): ரூ. 11.16 கோடி, 6வது பதிப்பு (2024): ரூ.2.24 கோடி, 7வது பதிப்பு (2025) : ரூ. 1.89 கோடி ஆகும், கடந்த ஐந்து ஆண்டுகளில் நினைவுப் பொருட்கள் மற்றும் பரிசுகளுக்கான மின்னணு ஏலங்கள் (EAuctions) நடத்தப்பட்ட தேதிகள்/காலம் பின்வருமாறு : 2021 : செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 7 வரை, 2022: செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 12 வரை, 2023: செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 31 வரை, 2024 : செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 31 வரை, 2025 : செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 31 வரை நடைபெற்றுள்ளது. 2019க்கு முன்பு, நவீன கலைக்கான தேசிய காட்சியகத்தால் (NGMA) நினைவுப் பொருட்கள் மற்றும் பரிசுகளுக்கான ஏலம் எதுவும் நடத்தப்படவில்லை என்று தெரிவித்தார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - தோவாளை கிழக்கு ஒன்றியம்

## பீமநகரி ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – வழக்கறிஞர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!



நாகர்கோவில், ஆக. 20-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை கிழக்கு ஒன்றியம், பீமநகரி ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 18.08.2026, செவ்வாய்க்கிழமை அன்று மாலை 6.30 மணியளவில் தோவாளை கிழக்கு ஒன்றிய செயலாளர் த.செல்வன் தலைமையில் வெள்ளமடம், அன்னை நகர் பகுதியில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசணைக் கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லை செல்வம், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், துணைச் செயலாளர் ஏ.ஆர்.பூதலிங்கம்பிள்ளை, பொதுக்குழு உறுப்பினர்கள் ஞானபாய், காதர் ரஹ்மான், மாவட்ட பிரதிநிதிகள் S.இம்மானுவேல், S. கல்யாணசுந்தரம், ஒன்றிய பொருளாளர் R.ராஜபாபு, துணைச் செயலாளர் C.ராஜா ரமணன், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் E.N.சங்கர், கழக நிர்வாகிகள் ஆசீர், ஜோசப், சங்கர நாராயணன், காட்வின், பிறைட், சுபா, சத்திய பாலா உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA-2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம்: 1 - வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 2 - கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் தளபதியாரின் அன்பு கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 3 - கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் தோவாளை கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

### தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டாரத்தில் உள்ள

## 176 பொது விநியோகக் கடைகளில் உள்ள மின்னணுச் சாதனம் செயல்படவில்லை!

### மின்னணு சாதனத்தைத் திரும்ப ஒப்படைத்து வட்டார வழங்கல் அலுவலகம் முன்பு முற்றுகைப் போராட்டம்!



தஞ்சாவூர், ஆக. 20

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில் 176 ரேஷன்கடைகளில் பொதுவிநியோகத் திட்டத்தின் பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவி சர்வர் சிக்னல் கிடைக்காததால் வட்ட வழங்கல் அலுவலகத்தை முற்றுகையிட்டு, பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியை ரேஷன்கடை பணியாளர்கள் வட்ட வழங்கல் அலுவலரிடம் ஒப்படைத்தனர்.

கும்பகோணம் வட்டத்தில் உள்ள 176 ரேஷன் கடைகள் மூலமாக பொதுவிநியோகத்தட்டத்தின் கீழ் அரிசி, கோதுமை, ஜினி, பருப்பு, பாமாயில் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இந்த ரேஷன்கடைகளில் பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவி மூலமாக கார்டுதாரர்களின் கைவிரல் ரேகையை பதிவு செய்து அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் 10 நாட்களுக்கு மேலாக ரேஷன்கடைகளில் பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவி சர்வர் கோளாறு ஏற்பட்டுள்ளதால் காலையில் முதல் மாலை வரை பொதுமக்களுக்கு ரேஷன்பொருட்களை விநியோகிக்க முடியவில்லையாம். மேலும் ரேஷன் கடைக்கு அத்தியாவசியப் பொருட்கள் வாங்க வரும் பொதுமக்களுக்கும், ரேஷன்கடை பணியாளர்களுக்கும் சர்வர் பிரச்சனையால் தேவையற்ற வாக்குவாதங்கள், தகராறுகள் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில் நேற்று (18ம்தேதி) காலை வழக்கம்போல் ரேஷன்கடைகளுக்கு வந்த ரேஷன் கடை பணியாளர்கள் பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியை இயக்கியபோதும் மீண்டும் சர்வர் சிக்னல் கிடைக்காமல் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இதனால் அதிர்ச்சியடைந்த ரேஷன் கடை பணியாளர்கள், தமிழ்நாடு அரசு நியாயவிலைக்கடை பணியாளர் சங்கத்தின் வட்டத்தலைவர் கலைவாணன் தலைமையில், மாவட்ட துணைத் தலைவர் செந்தில்குமார், வட்ட துணை செயலாளர் கார்த்திகேயன், வட்ட துணைத்தலைவர் ஆசைத்தம்பி ஆகியோரின் முன்னிலையில் குடந்தை தாசில்தார் அலுவலகம் முன்பு கூடி பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவி சர்வர் பிரச்சனையை தீர்க்கக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனை தொடர்ந்து ரேஷன் கடைப்பணியாளர்கள் கலைந்து சென்று, தாசில்தார் அலுவலகத்தின் மாடியில் உள்ள வட்ட வழங்கல் அலுவலகத்துக்கு சென்று, தமிழ்நாடு ரேஷன்கடை பணியாளர்களின் கோரிக்கை மனுவை வட்ட வழங்கல் அலுவலர் செந்தில்குமாரிடம் வழங்கி பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியையும் ஒப்படைத்தனர்.

இதுபற்றி ரேஷன் கடைப்பணியாளர்கள் கூறுகையில், பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியில் சர்வர் கோளாறு ஏற்பட்டால் கருவியின் நிறுவனத்தை சேர்ந்த மாவட்ட மேலாளர்கள் அல்லது தாலுகா அளவிலான பொறியாளர்கள் ரேஷன் கடை பணியாளர்களுக்கு உரிய பதில் அளிப்பதில்லை. பொது விநியோகத்திட்டம் சிறப்பாகச் செயல்பட தமிழக அரசு, பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியின் சர்வர் பிரச்சினையைத் உடனடியாகச் சரிசெய்ய வேண்டும். இல்லை என்றால் தமிழ்நாடு ரேஷன்கடை பணியாளர் சங்கத்தின் மாநில முடிவின்படி தொடர் வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றார்.

### கரூர் அருகே ஸ்கூட்டரில் சென்ற

## பெண்ணிடம் தாலிச் செயின் பறிக்க முயற்சி - த.வெ.க. நிர்வாகி கைது!

கரூர்,ஆக.20

கரூர் அருகே ஸ்கூட்டரில் சென்ற பெண்ணிடம் தாலி செயினை பறிக்க முயன்ற த.வெ.க. நிர்வாகியை போலீசார் நேற்று கைது செய்தனர். கரூர் கோவை ரோடு என்.எஸ்.கே.நகர் பகுதியை சேர்ந்த மகுடபதி மனைவி பிரியா. இவர், பெற்றோர் வீட்டுக்கு கடந்த 15ம்தேதி கரூரில் இருந்து ஈரோடு மாவட்டம் கொடுமுடி அருகே வருந்தியா பாளையத்திற்கு ஸ்கூட்டரில் சென்றார். அப்போது வேட்டமங்கலம் பத்ரகாளியம்மன் நகர் அருகே சென்ற போது பின்தொடர்ந்து டூ வீலரில் ஒருவர் சென்றார்.

அந்த நபர், திடீரென்று பிரியாவின் 5 பவுன் தாலி செயினை பறிக்க முயன்றார். அதிர்ச்சியடைந்த பிரியா, சுதாரித்து கொண்டு ஸ்கூட்டரை சாலையின் இடதுபுறமாக திருப்பினார்.

அப்பகுதியில் அதிகளவில் வாகனங்கள் சென்றதால் நகையை பறிக்க முடியாமல் அந்த நபர் அங்கிருந்து தப்பி சென்றார்.

இது தொடர்பாக பிரியா, வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் அப்பகுதிகளில் உள்ள சிசிடிவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தனர். இதில் நகை பறிக்க முயன்றது கரூர் மாவட்டம் புகளூர் நகர த.வெ.க. செயலாளர் நந்தகுமார் என தெரியவந்தது. இதுகுறித்து போலீசார் வழக்குப் பதிந்து நந்தகுமாரை நேற்று கைது செய்தனர்.



கமுதி பேரூராட்சி அலுவலகத்தை ஒட்டி உள்ள மேல்நிலை நீர் தேக்கும் தொட்டியை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் சிவா குரு பிரபாகரன் ஆய்வு செய்த போது கமுதி வடக்கு ஒன்றிய செயலாளர் வாசுதேவன் மரியாதை நிமித்தமாக சந்தித்து மேல்நிலை தொட்டியை புதிதாக 10 லட்சம் லிட்டர் கொள்ளளவு தேக்கும் தண்ணீர் தொட்டி கட்டி தர வேண்டும் என்றும் பேரூராட்சி பக்கம் உள்ள ஊரணி கரையில் முதியவர்கள் நடை பயிற்ச்சி செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு இரண்டு மனுக்களை அவரிடம் வழங்கினார்கள்.

## ஆடம்பரம்

**சுயமான அறுதிப் பெரும்பான்மை இல்லாமல் முட்டுத் தூங்கலில் முளைத்து நிற்கும் ஷோபா மாடல் ஆட்சி**

**அவசியமே இல்லாமல் 5.50 கோடியில் புதிய முதலமைச்சர் அலுவலகம்..**
**சுமார் 60 கோடியில் பஞ்சத்தில் வாடும்**
**எம்.எல்.ஏ.க்களுக்கு சொகுசு கார் என...**
**மக்கள் வரிப்பணத்தை**
**தனது கோட்டு மாடல் குதியாட்டத்தால் ஆடம்பரத்தில் கரைக்கிறது.**

**இந்த ஊதாரி ஆட்சி தமிழ்நாட்டை பீகாருக்குப் பின்னால் நிறுத்தாமல் ஓயாது...**

**என்னநாஞ் சொல்றது**



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்